இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 12.09.2026

## விஜய்யிடம் நீதியை எதிர்பார்க்கலாமா?

**தன்மீது புகார் சொன்ன மனைவியை, 'வொர்த் இல்லை' என்று சொன்னவர்தான் விஜய். அவரிடம் நீதி, நேர்மை, உண்மை, பண்பு, நல்லொழுக்கம், மனசாட்சி ஆகியவற்றை எதிர்பார்க்க முடியுமா? முடியாது. விஜய்க்கும் மனசாட்சிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதற்கு உதாரணம் ஸ்ரீவைகுண்டம் சம்பவம்.**

இதில் ஏமாற்றப்பட்டவர் பல்லாண்டு காலமாக விஜய் ரசிகை. அவரை ஏமாற்றியவர்கள் விஜய் கட்சியைச் சேர்ந்த இருவர். யாரைச் சொல்லி அந்தப்பெண்ணை ஏமாற்றினார்கள் என்றால் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் பெயரைச் சொல்லி ஏமாற்றி இருக்கிறார்கள். பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட அந்தப் பெண் இந்தப் பிரச்சினையை அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, ஜெகதீஸ்வரி ஆகிய மூவரிடமும் சொல்கிறார். அதன் பிறகு அந்தப் பெண், த.வெ.க.வில் இருந்தே நீக்கப்பட்டார். ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணனுக்கு போலீஸ் பாதுகாப்பு தரப்பட்டது. தொடர்ச்சியாக அந்தப் பெண், த.வெ.க. ஆட்களால் மிரட்டப்பட்டார். இறுதியாக வேறு வழியில்லாமல் அவர் கொடுத்த புகாரை அவரை வைத்தே வாபஸ் வாங்க வைத்து விட்டார்கள்.

விஜய்யிடம் நீதி கிடைக்கும் என்று ரசிகை எதிர்பார்த்தார். கிடைக்கவில்லை. உயிர் பயத்தில் வாழ்வதைவிட, வழக்கை வாபஸ் வாங்குவதுதான் த.வெ.க. ஆட்சியில் நிம்மதியாக வாழ்வதற்கு வழி என்று நினைத்தார் அந்தப் பெண்.

புகார் அளித்த பெண்ணும், கைதான இருவரும் சமரசமாகச் செல்வதாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு செய்தார்கள். இதைத் தொடர்ந்து வழக்கை ரத்து செய்ய உத்தரவிட்டுள்ளது உயர்நீதிமன்றம். எஃப்.ஐ.ஆரையும் ரத்து செய்துள்ளது உயர்நீதிமன்றம்.

**'எனக்கு ஸாரி வேண்டாம் சார்... நீதி வேண்டும் சார்' என்று டயலாக் விட்டவர் விஜய். அவரது ஆட்சியின் லட்சணம் இதுதான்.**

ஸ்ரீவைகுண்டம் த.வெ.க.வைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்து கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தார்கள் விஜய் கட்சியைச் சேர்ந்த இருவர். பிரச்சினை வெளிச்சத்துக்கு வந்ததும் த.வெ.க. தூத்துக்குடி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலமுருகன், ராமநாதபுரம் மாவட்ட த.வெ.க. நிர்வாகி ஜெயபால் ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள். இதில் மிக முக்கியமானவர் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன். இவரது பெயரைச் சொல்லித்தான் அந்தப் பெண் அழைத்துச் செல்லப்பட்டு உள்ளார்.

"விஜய்யின் தீவிர ரசிகையான என்னை ஸ்ரீவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ.வின் பெயரைச் சொல்லி அழைத்துச் சென்று கூட்டு பலாத்காரம் செய்தார்கள்" என்று கதறுகிறார் அந்தப் பெண்.

"நான் 1997 ஆம் ஆண்டு முதல் விஜய்யின் தீவிர ரசிகை. ரசிகர் மன்றத்திலும் தொடர்ந்து செயல்பட்டு வந்தேன். இப்போது ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. ஆகி இருக்கும் அன்னை விஜி சரவணனுடன் இணைந்து கடந்த இரண்டு வருடமாக கட்சிப் பணியாற்றி வந்தேன். அப்போது பாலசுப்பிரமணியம் அறிமுகம் ஆனார். அவர் எனக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொன்னார். அதற்காக ராமநாதபுரம் அழைத்துச் சென்றார். சரவணன் பெயரைச் சொன்னதால்தான் நானும் சென்றேன். காரில் செல்லும் போது கலர் பாட்டிலில் ஏதோ கலந்து கொடுத்தார்கள். அதனால் மயக்கம் அடைந்தேன். அவரும் இன்னொருவரும் சேர்ந்து என்னை பாலியல் வன்கொடுமை செய்தனர். 'சரவணன்தான் கூட்டி வரச் சொன்னார்' என்று அவர்கள் சொன்னார்கள். இதை வெளியில் சொன்னால், 'உனது குழந்தையை கொலை செய்துவிடுவோம்' என்றார்கள். மே மாதம் 3ஆம் தேதி இது நடந்தது.

இது பற்றி சரவணனிடம் கேட்டேன். 'புஸ்ஸி ஆனந்திடம் சொல்லி உனக்கு வேலை வாங்கித் தருகிறோம், இதைப் பெரிது படுத்தாதே' என்று எம்.எல்.ஏ. சரவணன் சொன்னார். என்னோடு சேர்ந்து இன்னொரு பெண்ணும் பாதிக்கப் பட்டுள்ளார். அவர் இதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று என் காலில் விழுந்து அழுதுள்ளார். இது பற்றி அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவிடம் சொன்னேன். அமைச்சர் ஜெகதீஸ்வரியிடமும் சொன்னேன். யாரும் சரவணன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை" என்கிறார் அந்தப் பெண்.

1997 ஆம் ஆண்டு முதல் விஜய் ரசிகையாக இருந்தவருக்கு நடந்திருக்கும் அவலம் இது. விஜய் கட்சி ஆரம்பித்ததில் இருந்து அதில் செயல்பட்டவருக்கு நடந்த கொடுமை இது. ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ.வான அன்னை விஜி சரவணனிடம் பணியாற்றி உள்ளார். கேரளாவில் லாட்டரி தொழில் பார்த்து வந்த அவருக்கு கணக்கு வழக்குகள் பார்த்து வந்துள்ளார் இந்தப்பெண். இத்தகைய பெண்ணுக்கு விஜய் கொடுத்த நீதி என்ன? த.வெ.க. கட்சியில் இருந்து அவரை நீக்கியதுதான் நீதி. இதைவிடக் கேவலமான, படுமோசமான முதலமைச்சர் இருக்க முடியுமா? கொடுத்த புகாரை வாபஸ் வாங்க வைக்கும் அளவுக்கு இப்போது மிரட்டி இருக்கிறார்கள். இதுதான் விஜய் ஆட்சியின் லட்சணம் ஆகும்.

பாலியல் வன்கொடுமை செய்த பாலசுப்பிரமணியம், ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் உடன் இருக்கும் படம் வெளியாகி இருக்கிறது. கட்சித் துண்டுடன் இருக்கிறார் சரவணன். எனவே இது சமீபத்தில் எடுத்த படம் தான்.

**சரவணன் மீது விஜய்யால் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனென்றால் அவரது ஆதரவில்தான் விஜய் ஆட்சி நடக்கிறது. சரவணன் மீது நடவடிக்கை எடுத்தால் விஜய் நாற்காலி கவிழ்ந்துவிடும்.**

**இனி யாராவது புகார் கொடுக்க வருவார்களா விஜய் ஆட்சியில்..?**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகள் தேர்தலில் வெற்றி பெற்ற சங்க தலைவர் பி.விஜயகுமார், செயலாளர் இ.அசோக்குமார், துணைத் தலைவர் எச். கருணாகரன், துணைச் செயலாளர் ஏ.டி.கிஷோர்குமார், பொருளாளர் எம்.விஜயராகவன், இளநிலை செயற்குழு உறுப்பினர் கே.ரத்தினவள்ளி, சென்னை உயர் நீதிமன்ற இளநிலை செயற்குழு உறுப்பினர் வி.கார்த்திக் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர், என்.ஆர்.இளங்கோ, துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் என்.மருதுகணேஷ், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே.சரவணன் மற்றும் கழக வழக்கறிஞர்கள் உடனிருந்தனர்.

### தியாகி இம்மானுவேல் சேகரனார் நடத்திய போராட்டங்கள், வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்!

## இம்மானுவேல் சேகரனார் புகழைப் போற்றுவோம்!

### நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மரியாதை செலுத்தி – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!





**பரமக்குடி, செப்.12-**

**தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் நினைவுநாளான நேற்று - கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடியில் உள்ள இம்மானுவேல் சேகரனார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து வணங்கி, திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.**

பின்னர், வலைதளத்தில் பதிவிட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "தியாகி இம்மானுவேல் சேகரனார் நடத்திய போராட்டங்கள் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:-

விடுதலைப் போராட்ட வீரரும் – ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடியவருமான தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் 69 ஆவது நினைவு நாளான இன்று, தி.மு.கழகத்தின் சார்பில், பரமக்குடியில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினோம்.

சாதியப் பாகுபாட்டிற்கும் - வன்கொடுமைக்கும் எதிராகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் சம உரிமை - கல்வி பொருளாதார விடுதலைக்காகவும் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்கள் நடத்திய போராட்டங்கள் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் நினைவையும், அவரது ஈடுசெய்ய முடியாத தியாகத்தையும் போற்றும் வகையில், கழகத்தலைவர் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் வெண்கலச் சிலையுடன் கூடிய மணி மண்டபம் கட்டப்பட்டு, கடந்தாண்டு திறக்கப்பட்டது.

இம்மானுவேல் சேகரனார் அவர்களின் புகழைப் போற்றுவோம்! வாழ்க தியாகி இம்மானுவேல் சேகரனார்.

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கலைஞர் நகர் வடக்கு பகுதிக் கழகப் பொருளாளர்

## துரை.ரஞ்சித்குமார் ஆர்.சாந்தி இல்லத் திருமண வரவேற்பு: கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்துகிறார்!

### மாவட்டச் செயலாளர் மா. சுப்பிரமணியன் பங்கேற்பு! க.தனசேகரன் எம்.சி. தலைமை! மு.இராசா எம்.சி. முன்னிலை!

சென்னை, செப். 12 -

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழகப் பொருளாளர் துரை.ரஞ்சித்குமார் - ஆர்.சாந்தி ஆகியோரின் புதல்வி ஆர்.பத்மபிரியாவுக்கும், திருவண்ணாமலை மாவட்டம், வி.நாராயணன் - என்.தேவி ஆகியோரின் புதல்வர் என்.அரவிந்தன் பாலாஜிக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (12.09.2026 சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, சென்னை, அரும்பாக்கம், 100 அடி ரோட்டில் உள்ள ஐஸ்வர்யா மஹாலில் நடைபெறுகிறது.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

வடக்கு பகுதிச் செயலாளர் மு.இராசா எம்.சி, தெற்கு பகுதிச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி, அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம்



எம்.சி, வட்டச் செயலாளர் பொன்.லோகு எம்.சி, மாநில மகளிர் அணி சமூக வலைதளப் பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மு.கோவிந்தராஜன், வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல், எஸ்.பாஸ்கரன், ஆர்.பாபு, ந.அதியமான் எம்.சி, இரா.பொன்னுரங்கம், எஸ்.கமலக்கண்ணன், சு.பா.முத்துவேல், சொ.ஜெயக்குமார், வழக்கறிஞர் வி.நாகராஜ், ஏ.ஜி.ரவி, இரா.ஏ.பாபு, வழக்கறிஞர் எஸ்.முருகன், என்.எஸ்.கோபி, ஐ.சி.ஐ.சி.ஐ.செல்வம், கே.ஜி.பாபு, டி.டி.சிபி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

திருமண வரவேற்பு விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இவ்விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், அன்பகம் கலை, ப.தாயகம் கவி, பூச்சி எஸ்.முருகன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ, ஆவடி சா.மு.நாசர், தா.மோ.அன்பரசன், கே.ஆர். பெரிய கருப்பன், நே.சிற்றரசு, மேயர் பிரியா ராஜன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கலாநிதி வீராசாமி எம்.பி, ஏ.எம். வி.பிரபாகரராஜா, காசி முத்து மாணிக்கம், காரம்பாக்கம் க. கணபதி, எஸ்.அரவிந்த் ரமேஷ், அண்ணா நகர் எம்.கே. மோகன், ஆர்.கிருஷ்ணசாமி, வீரமணி ஜெயக்குமார், ஆர். டி.சேகர், வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, ப.ரங்கநாதன், பா.பெஞ்சிமின், தமிழன் பிரசன்னா, வி.ஜி.ராஜேந்திரன், இ.கருணாநிதி, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், கார்த்திக் மோகன், என்.இ.கே.மூர்த்தி, கன்னிகை ஜி.ஸ்டாலின், அறிவாலயம் முரளி, அறிவாலயம் தனபால், வே.உமாகாந்த், உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராசன், பி.எஸ்.முருகேசன், வாசுகி பாண்டியன், செல்வி ரமேஷ் எம்.சி, நிலவரசி துரைராஜ் எம்.சி, ஆர்.சசிகுமார், நிஷா சையத்,

எஸ்.குணசேகரன், த.விஸ்வநாதன் எம்.சி, மு.மனோகரன், எஸ்.பாஸ்கரன் எம்.சி, ச.பரமசிவம், இரா.துரைராஜ் எம்.சி, நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி, வி.இ.மதியழகன் எம்.சி, வேளச்சேரி வே.ஆனந்தன் எம்.சி, டி.நகர் கே.ஏழுமலை எம்.சி, கோ.சு.மணி, எம்.விநாயகமூர்த்தி, துரை வீரமணி, சி. வெங்கடேசன், இ.எட்டியப்பன்,

வழக்கறிஞர் ஸ்ரீதர் எம்.சி, மா.அன்பரசன், எஸ்.டி.அரிகிருஷ்ணன், சைதை சாதிக், நா.மணிகண்டன், சு.இளங்கோவன், வி.ச.சங்கரன், க.அர்ஜுனன், டி.எஸ்.பி.தென்னரசு, ஆர்.டி.நல்லேந்திரன், அர.அ.எழில்வாணன், கே.பாலமுருகன், சா.ரா.சீனிவாசன், எஸ்.சண்முகம், அ.ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பகுதி துணைச் செயலாளர்கள் வாட்டர் எஸ்.விஜயகுமார், விருகை சா.நாகராஜன், பி.விஜயலட்சுமி ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.